DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.230/2019**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 6 |
| | | Defence |
| | | Court |
| Name | : | மருத்துவர் திரு. அன்பு |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of August 2025.

**(A7 died. Others Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சமூக மருத்துவத்துறை உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் நான் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணிமருத்துவராக பணிபுரிந்தபோது, கடந்த 01.03.2016 ம் தேதி மாலை 05.45 மணிக்கு

நல்லமலை என்ற 43 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் ஒருவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அவசர சிகிச்சை பிரிவிற்கு அழைத்து வரப்பட்டார். அவரை அடையாளம் தெரியாத 6 நபர்கள் 29.02.2016 ம் தேதி இரவு 11.45 மணியளவில் தேவர்குளம் மலைப்பகுதி அருகே வைத்து அரிவாளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனைசெய்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1) வலது கையில் 15 x 5 x 2 cm அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

2) வலது முன்னங்கையில் 6 x 3 x 2 cm அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

3) இரண்டு கால் முட்டியிலும் பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன.

4) வலது தோள்பட்டையில் பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன.

5) இடது தோள்பட்டையில் நேரான பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன.

6) அவரது தலையில் 4 x 1 cm அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து நுண்கதிர் படம் எடுக்க பரிந்துரைக்கப்பட்டது. அவரை நுண்கதிர் படம் எடுத்ததில் அவருக்கு வலது கழுத்துப்பட்டை எலும்பின் வெளிப்புற பகுதியில் ஒரு எலும்பு முறிவு காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்து நான் சான்று வழங்கினேன். நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.30** ஆகும். **காய சான்று அ.சா.ஆ.31** ஆகும். ஒரு நபரை கூர்மையான அரிவாளால் தாக்கும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

ஒரு நபர் உயரமான மலைப்பகுதியிலிருந்து கரடுமுரடான இடத்தில் தவறி கீழே விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi